தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

### முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 5342/SCIC/2024

திரு.K.ரகுராமன் - புகார்தாரர்
C-2/106, First Floor, SSM NAGAR
ஆலப்பாக்கம், சென்னை - 600 063.
Phone:98415 00900

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை-600 008.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **23.03.2023** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 30.09.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 11.11.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 23.03.2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், எழும்பூர், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் "Planning Permit No.8256, Dt.05-08-2013 File No.B2/17743/12 - SSM Builders and Promoter Group Development of Residential and Commercial Blocks - Total 66 Blocks - reg - Total of area proposed 'SSM Nagar Residential and Commercial Blocks' i.e. 'total project area'" என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. K.ரகுராமன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது

கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி / செல்வி.அ.ஜெயந்தா சொர்ணமணி, துணை திட்ட அமைப்பாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 30/09/2024 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, மனுதாரரின் இதே பொருண்மை கொண்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான மனுவின் அடிப்படையிலான வழக்கு SA 17573/SCIC/2023 ஆணையத்தால் 19/08/2025 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 19/08/2025 மற்றும் 25/09/2025 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கு எண். SA 17573/SCIC/2023 ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, முற்றாக்கப்பட்டுள்ள காரணத்தினால், மனுதாரரின் புகார் மனு நிலைக்கத்தக்கதல்ல என ஆணையம் முடிவு செய்து தள்ளுபடி செய்கிறது. மேலும், தனது வாதுரையினை பதிவு செய்ய, மனுதாரருக்கு ஆணையம் அழைப்பாணை அனுப்பப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5342/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை-600 008.

**<u>புகார்தாரர்</u>**

திரு.K.ரகுராமன்
C-2/106, First Floor, SSM NAGAR
ஆலப்பாக்கம், சென்னை - 600 063.
Phone:98415 00900

RG/Sr.PC